The Cherian FOUNDATION

10 வது ஆண்டு நிறைவு

ஃபவுண்டேஷன் நிறுவிய நாள்: 11.03.2003

RAJ HOLDINGS

# எதிர்காலம் வளம்பெற மாற்றங்கள் புரிவோம்

ஜனவரி - டிசம்பர் 2013 செய்திமடல் | பகுதி : 2 | இதழ் : 1

* இந்த செய்தி மடல் ராஜ் குடும்ப உறுப்பினர்களுக்கும், ஆதரவாளர்களுக்கு மட்டுமே.

செரியன் ஃபவுண்டேஷன்

## இயக்குநர் உரை



அனைவருக்கும் வணக்கம்

சென்ற ஆண்டில், நமது நிறுவனத்தின் தற்போதைய திட்டங்களுக்கும், ஒரு சில புதிய முயற்சிகளுக்கும் நீங்கள் கொடுத்த ஆதரவை குறித்து நான் மிகவும் பெருமதிம் அடைகிறேன்.

இப்பணிகள் யாவும் உங்களுடைய மேலான ஒத்துழைப்பில்லாமல் நிறைவேற்றியிருக்க முடியாது.

செரியன் ஃபவுண்டேஷன் தொடங்கி 10 வருடங்கள் உருண்டோடி விட்டன. அதற்காக இந்த இரண்டாவது செய்திமடலினை வெளியிடுகிறோம். இம்மடலை படித்து, தொடர்ந்து உங்களது ஆதரவை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

உங்கள் கருத்துக்களையும் மற்றும் ஆலோசனை களையும் வரவேற்கிறோம். நல்வாழ்த்துக்கள்.

திருமதி. வல்சா பெஞ்சமின் செரியன்
இயக்குநர்
தி செரியன் ஃபவுண்டேஷன்

## முன்னோட்டம் 2013

பிப்ரவரி





மார்ச்

மே



ஜூன்



டிசம்பர்



அக்டோபர்







நவம்பர்

## நிறுவனத்தை பற்றி

தி செரியன் ஃபவுண்டேஷன் என்பது செரியன் குடும்பத்தினரின் ஒரு தனியார் குடும்ப தொண்டு நிறுவனம்.

The Cherian FOUNDATION

இந்நிறுவனத்தின் நோக்கம் "அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய வாய்ப்புகள் இல்லாதவர்களுக்கு வாய்ப்புகளை அமைப்பதே" ஆகும். அவர்கள் வாழ்வில் கல்வி, ஆரோக்கியம் மற்றும் திறன்களை அதிகரிக்க செயல்பட்டு வருவது. இந்த சேவை நிறுவனம், நமது ராஜ் குளோபல் ஹோல்டிங்கின் பணியாளர்களுக்கு மட்டுமல்லாமல், நமது தொழிற்கூடத்தின் அருகில் உள்ள சமுதாயத்திற்கும் பல நன்மைகளை செய்து வருகிறது. இதை தவிர பல மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் தொண்டு செய்து வருகிறது. இதன் மூன்று முக்கிய அம்சங்களாவது:

- கல்வி உதவி
- அடிப்படை ஆரோக்கியம்
- விழிப்புணர்வு மற்றும் சமுதாய பங்கேற்பு

மேலும், கூட்டாண்மை சமுக பொறுப்பு பிரிவாகவும் செயல்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல் மூலமாக ராஜ் குளோபல் ஹோல்டிங்கில் பணியாற்றும் அனைத்து பணியாளர்களும் சமூக சேவை செய்ய அடித்தளமாக விளங்குகிறது.

மேலும் விபரங்கள் அறிய, www.cherianfoundation.org என்ற இனைய தளத்தில் அறிந்துக் கொள்ளலாம், அல்லது 044-39278133/34 என்ற தொலை பேசியில் சார்லஸ் (திட்ட ஒருங்கிணைப்பாளர்) என்பவரிடம் அறிந்துக் கொள்ளலாம்.

# பிப்ரவரி

## இலவச மூக்கு கண்ணாடி விநியோகம்

பிப்ரவரி 1-ஆம் தேதியில் அழிஞ்சிவாக்கத்தில் பணிபுரியும் 45 பணியாளர்களுக்கு இலவச மூக்கு கண்ணாடிகளை தி செரியன் பவுண்டேஷன் வழங்கியது. அறங்காவலர் திரு. ஜார்ஜ் B. செரியன் அவர்கள், பணியாளர்களுக்கு மூக்கு கண்ணாடிகளை வழங்கி அதை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை எடுத்துரைத்தார்.


அறங்காவலர் ஜார்ஜ் பயனாளிகளுடன்.

## அழிஞ்சிவாக்கத்தில் இலவச கண் மருத்துவ முகாம்

ராஜன் கண் மருத்துவமனையுடன் இணைந்து பிப்ரவரி 7-ஆம் தேதி, அழிஞ்சிவாக்கத்தில் உள்ள பணியாளர்களுக்கு இலவச கண் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இம்முகாம் மூலமாக 158 பணியாளர்கள் பயனடைந்தார்கள்.

## போலியோ சொட்டு மருந்து தினம் பற்றிய விழிப்புணர்வு

"போலியோ சொட்டு மருந்து தினம்" பற்றிய விழிப்புணர்வு அடங்கிய ஒரு ஆடியோ குறுதகட்டை ரோட்டரி மாவட்டம் 3230 வழங்கியது. இந்த குறுதகட்டின் மூலம் ராஜ் ஹோல்டிங்ஸில் உள்ள அனைத்து பணியாளர்களுக்கு, பிப்ரவரி 22 மற்றும் 23 ஆகிய தினங்களில் வழிப்புணர்வு வழங்கப்பட்டது. பணியாளர்கள் "போலியோ இல்லாத சமுதாயம் உருவாக" தங்கள் குழந்தைகளுக்கும், உறவினர், நண்பர், அக்கம் பக்கத்தில் உள்ள குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து கொடுக்க, அழைத்துச் செல்ல அறிவுறுத்தப்பட்டார்கள்.

# மார்ச்

## அழிஞ்சிவாக்கத்தில் - சமையல் எரிவாயு பற்றிய விழிப்புணர்வு

மார்ச் மாதம் முதல் மற்றும் இரண்டாம் வாரத்தில் ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் வழங்கிய


விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்ற பணியாளர்கள்.

குறும்படத்தின் மூலம் அழிஞ்சிவாக்கம் பணியாளர்களுக்கு சமையல் எரிவாயு பற்றிய விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. இக்குறும்படத்தின் வழியாக சமையல் எரிவாயு சேமிப்பது குறித்தும், பாதுகாப்பு முறைகள், எரிவாயு கசிவு இருப்பதாக உணர்ந்தால் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியை செரியன் ஃபவுண்டேஷன் சிறப்பாக ஏற்பாடு செய்தது

## டாக்டர். குப்தா மெட்ரிக்குலேஷன் பள்ளியில் விளையாட்டு போட்டிகள்

ஆதரவற்ற சிறார்களை பராமரித்து, கல்விக் கொடுக்கும் டாக்டர். குப்தா மெட்ரிக் குலேஷன் பள்ளியின் நிர்வாகத்தின் வேண்டுகோளின்படி விளையாட்டு போட்டிகளுக்கு தேவையான பரிசுப் பொருட்களை தி செரியன் ஃபவுண்டேஷன் நன்கொடையாக வழங்கியது. நமது நிறுவனத்தின் சார்பாக, அழிஞ்சிவாக்கம் பணிதள மேலாளர் மற்றும் HR பணியாளர் மார்ச் 8 ஆம் தேதி பள்ளி ஆண்டு விழாவில் கலந்துக் கொண்டு, வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பரிசுகளை வழங்கினார்கள்.


திரு. சுரேஷ் மாதவன், FM வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்குதல்

## அகில உலக பெண்கள் தினம்

அகில உலக பெண்கள் தினம் 6வது முறையாக நமது நிறுவனத்தில் மார்ச் 23-ம் தேதி அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. துரித ஊட்டசத்து (சமைக்க தேவையில்லை) உணவுகளை தயாரித்தல் பற்றி திருமதி Fenn மற்றும் திருமதி. ஹேமாவதி அவர்கள் செய்முறை விளக்கம் தந்தார்கள். திருமதி கரினா ஜார்ஜ் செரியன் அவர்கள் கேச பராமரிப்பு, அழகு குறிப்பு மற்றும் அலுவலக ஆடை நல்லொழுக்கம் பற்றி விரிவாக



பெண்கள் தின நிகழ்ச்சியில் அறங்காவலர்கள்

எடுத்துரைத்தார். திருமதி சாரா விவேக் அவர்கள் நேரம் எவ்வாறு நிர்வகிக்க வேண்டும் என்பதற்கு அறிவுரைகளை வழங்கினார். "உடன் ஊழியர்களை சிறப்பாக அறிந்துக் கொள்" என்ற விளையாட்டு போட்டி நடைபெற்றது. Lucky Dip-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட 11 ஊழியர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது.

# ஏப்ரல்

### இலவச மூக்கு கண்ணாடி விநியோகம்

பிப்ரவரி 7-ஆம் தேதி, நடைப்பெற்ற இலவச கண் மருத்துவ முகாமில் கண்டறியப்பட்ட 42 பணியாளர்களுக்கு திருமதி வல்சா பெஞ்சமின் செரியன் அவர்கள் இலவச மூக்கு கண்ணாடிகளை வழங்கினார். மூக்கு கண்ணாடி விநியோகிக்கும் முன்னதாக தனது உரையில், இந்த கண்ணாடிகளை எவ்வாறு பயன்படுத்தடுவது என்பதை பற்றி விளக்கினார்.

# மே

### இலவச கண் புரை அறுவை சிகிச்சை

ராஜன் கண் மருத்துவமனையின் உதவியுடன் 5 பணியாளர்களுக்கு இலவச கண்புரை அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.




அறுவை சிகிச்சைக்கு பின்பு

# ஜூன்

### B & H Exports-ல் சமையல் எரிவாயு பற்றிய விழிப்புணர்வு

பணியாளர்களிடையே சமையல் எரிவாயு மற்றும் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், ஜூன் மாதம் 7-ஆம் தேதி B & H Exports, முகப்பேரில் குறும்படத்தின் மூலம் விழிப்புணர்வு அளிக்கப்பட்டது.

### திருவண்ணாமலை பள்ளியில் வகுப்பறை கட்டுமான பணி

ரோட்டரி ராமு ரெட்டியார் உயர்நிலைப் பள்ளியில் Madras Mid Town Round Table (MMRT)-42 உதவியால் 'Freedom through Education' திட்டத்தின் மூலமாக 5 வகுப்பறைகள் கட்டப்பட்டது. இதற்காக



பள்ளி வளாகத்தில் மரம் நடுதல்

'Round Table'-'Dawn to Dusk' நிதி திரட்டும் நிகழ்ச்சியினை நடத்தினர். திரு. ஜார்ஜ் B செரியன், செரியன் ஃபவுண்டேஷன் சார்பாக அனைத்து பணிகளை முன் நின்று செயல்படுத்தினார்.



திரு. ஜார்ஜ் உரையாற்றுகிறார்

### கொப்பலில் இலவச கண் மருத்துவ முகாம்

ராஜ் ஹோல்டிங்ஸின் சமூக பொறுப்பு பிரிவின் விரிவாக்கமாக முதன் முறையாக, கர்நாடக மாநிலத்தில் உள்ள கொப்பலில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ஜூன் மாதம் 21 மற்றும் 22-ஆம் தேதிகளில் இலவச கண் மருத்துவ முகாம் நடைப்பெற்றது. கொப்பல் அரிமா மருத்துவமனையின் குழுவின் உதவியால், 333 பணியாளர்கள் இம்முகாமின் மூலமாக பயனடைந்தார்கள். இதில், 110 பணியாளர்களுக்கு நமது ராஜ் ஹோர் இன்டர்நேஷனல் நிறுவனம் இலவச மூக்கு கண்ணாடிகளை வழங்கியது.



பணியாளர்களுக்கு கண் பரிசோதனை செய்தல்

### பள்ளிக்கரனை பள்ளியில் வகுப்பறை கட்டுமானப் பணி

MMRT-42 உதவியுடன் 'Freedom through Education' திட்டத்தின் வாயிலாக அரசு மேல்நிலை பள்ளி, பள்ளிக்கரனையில் 6 வகுப்பரைகள் கட்ட முன்வந்தது. தி செரியன் ஃபவுண்டேஷன் எல்லாப் பணிகளையும் முன் நின்று செயல்படுத்தியது. இவ்வகுப்பரைகளை மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் திரு. ரோசைய்யா அவர்கள் திறந்து வைத்தார். சிறப்பு விருந்தினராக நமது மேலாண்மை அறங்காவலர் திரு. பெஞ்சமின் செரியன் அவர்கள் தனது உரையில் தி செரியன் ஃபவுண்டேஷன் நிறுவனம், Freedom through Education செயல்படுத்தும் திட்டங்களை முன் நின்று செயல்படுத்தும் என்றும் உறுதியளித்தார்.



திறப்பு விழாவில் மேதகு ஆளுநர் டாக்டர் திரு. ரோசைய்யா, மேலாண்மை அறங்காவலர் திரு. பெஞ்சமின் செரியன்




திரு. ஜார்ஜ் உரையாற்றுகிறார்

### கல்வி உதவித் தொகை

தி செரியன் ஃபவுண்டேஷன் செல்வி. T. பச்சையம்மாளுக்கு 10-ஆம் வகுப்பு முதல் கல்வி உதவி தொகையை வழங்கி வருகிறது. தற்பொழுது அவள் SIET கல்லூரியில் முதலாம் ஆண்டு படிக்கிறாள். நாம் தொடர்ந்து அவள் பட்டதாரி ஆகும் வரை உதவி செய்வோம்.

### மரம் நடு விழா

ராஜ் ஹோல்டிங்ஸின் நிர்வாகிகள் மற்றும் ஊழியர்கள் ஜீலை 15-ஆம் தேதி அன்று 36 மரக்கன்றுகளை ராஜ் ஹேர் இண்டர்ஷேனல், அழிஞ்சிவாகம் கட்டிடம் அமைந்துள்ள சாலையில் நட்டார்கள்.



அறங்காவலர் திரு. ஜார்ஜ் செரியன் முன்னிலையில் FC பாலாஜி அவர்கள் மரம் நடுதல்

## செப்டம்பர்

### குழந்தைகள் காப்பகம்

ராஜ் ஹேர் இன்டர்நேஷனல் அழிஞ்சிவாக்கத்தில் அமைந்துள்ள குழந்தைகள் காப்பகத்திற்கு கற்கத் தேவையான விளக்கப்பட (கனிகள், காய்கறிகள், எண்கள்) அட்டைகளை வழங்கியது.

### எழுத்திறவு திட்டம்

இயக்குநர், வல்சா பெஞ்சமின் செரியன் எழுத்தறிவு திட்டத்தின் ஒரு மாதிரி பாடத்திட்டம் தயாரித்தார்கள். மேலும், இந்நிலைகளுக்குத் தேவையான கல்வி உபகாரணங்களும், எழுது பொருட்களும் வழங்கப் பட்டன.

நிலை: 1
கால வரையறை: 3 மாதம்
கற்க வேண்டிய பாடம்: எண் 1-200, தமிழ் எழுத்துக்கள் (உயிர், மெய், மற்றும் உயிர்மெய் எழுத்துக்கள்

நிலை: 2
கால வரையறை: 3 மாதம்
கற்க வேண்டிய பாடம்: எளிமையான தமிழ் வார்த்தைகள், கூட்டல், கழித்தல், மணி பார்த்தல், கையெழுத்து போடுதல்

நிலை: 3
கால வரையறை: 4 மாதம்
கற்க வேண்டிய பாடம்: தமிழ் வாக்கியம் அமைத்தல், கடிதம் எழுதுதல், வாய்ப்பாடு

<u>நிலை: 4</u>
கால வரையறை: 1 மாதம்
கற்க வேண்டிய பாடம்: செய்தித்தாள் வாசித்தல், ஏடிஎம் பயன்படுத்தும் முறை, காசோலை மற்றும் வரைவு காசோலை அனுப்புதல்

<u>தேர்வு:</u> ஒவ்வொரு நிலையிலும், சிறிய தேர்வின் மூலமாக அவர்கள் கல்வி தகுதி கண்டறியப்பட்டும், 12 ஆம் மாதத்தில் கடைசி தேர்வு நடத்தப்படும்.

# அக்டோபர்

### ஓவியப்போட்டிகள்

சமுக சேவா பள்ளி, மயிலாப்பூரில் திருமதி. கரினா ஜார்ஜ் செரியன் அவர்கள் "தங்கள் நண்பர்களுக்கு கொடுக்க விரும்பும் பரிசு" என்ற தலைப்பின் கீழ் ஓவியப் போட்டிகளை நடத்தினார். இதில் 47 குழந்தைகள் பங்கேற்றார்கள். இதில் சிறப்பாக ஓவியம் வரைந்த 8 குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இதே போன்ற போட்டி, முகப்பேரில் அமைந்துள்ள ரோட்டரி மாதிரிப் பள்ளியிலும் நடைப்பெற்றது. இப்பள்ளியில் 6-ஆம் வகுப்பு முதல் 8-ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களில் ஓவிய ஆர்வமுள்ள 35 குழந்தைகள் பங்கேற்றார்கள். இதில் சிறப்பாக ஓவியம் வரைந்த 12 குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.



ரோட்டரி மாதிரி பள்ளியில் ஓவிய போட்டி


சமுக சேவா பள்ளியில் ஓவிய போட்டி

### நமது நிறுவனம் தத்தெடுத்த பள்ளியில் விளையாட்டு போட்டிகள்:

மூன்றாம் ஆண்டு விளையாட்டுப் போட்டிகள் ரோட்டரி மாதிரி பள்ளி மாணவ, மாணவிகளுக்கும் அக்டோபர் மாதம் 17-ஆம் தேதி, முகப்பேர் ஏரி திட்டத்தில் அமைந்துள்ள டாக்டர் அம்பேத்கர் விளையாட்டுத் திடலில் நடைப்பெற்றது. இயக்குநர், திருமதி. வல்சா பெஞ்சமின் செரியன் அவர்கள் தலைமையில் இப்போட்டிகள் நடைப்பெற்றது. திருமதி கரினா ஜார்ஜ் செரியன் அவர்கள் உடற்கல்வி ஆசிரியருடன் இணைந்து இப்போட்டிகளை சிறப்பாக ஏற்பாடு செய்தார். வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. பங்கேற்ற 165 மாணவ மாணவியர்களுக்கு குளிர்பானம் வழங்கப்பட்டது.


50 மீட்டர் கோணி ஓட்டப்பந்தயம்

# நவம்பர்

### Schools into smiles திட்டத்தின் 6 ஆம் ஆண்டு கலை நிகழ்ச்சிகள்:

6ஆம் ஆண்டு "Schools into Smiles Cultural Fest 2012" நிகழ்ச்சி RI Dist 3230 Rotary Centenary Chartiable Trust-டுடன் இணைந்து சிறப்பாக நடைப்பெற்றது. இந்த நிகழ்ச்சி சர் முத்தையா செட்டியார் ஆண்கள் மேல் நிலைப் பள்ளியில் 10.11.2013 அன்று நடைப்பெற்றது. வினாடி வினா, போஸ்டர் தயாரித்தல், மாறுவேடப் போட்டி, பாட்டுப் போட்டி, குழு நடனம், ஓவியப் போட்டி போன்ற நிகழ்ச்சிகள் நடைப்பெற்றன. மேலும், Rtn. கிறிஸ்டோபர், திருமதி சாரா விவேக் மற்றும் திருமதி. கரினா ஜார்ஜ் செரியன் அவர்கள், ஃபேஷன் ஷோ நடத்தியது கூடுதல் சிறப்பு அம்சமாக அமைந்தது.

RI Dist 3230 2015-16 ஆண்டின் ஆளுனராக தேர்ந்தெடுங்கப்பட்ட Rtn .C. R. ராஜீ, அவர்கள் பரிசுகளை வழங்கினார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட Caplin Point ஆய்வக நிறுவனத் தின் தலைவர், திரு. பார்த்திபன் அவர்கள் குழந்தைகள் எவ்வாறு வாழ்வில் முன்னேற முடியும் என்பதை தனது வாழ்க்கை அனுபத்தின் வாயிலாக எடுத்து உரைத்தார்.



ரோட்டரி மாவட்டம் 3230 Governor Nominee Rtn .C. R. ராஜீ குழு நடனத்தில் வெற்றிப் பெற்ற காஞ்சிபுரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு பரிசுகளை வழங்குகிறார்.

### சிறந்த பள்ளிக்கான பரிசு

இவ்வாண்டு, Schools into Smiles திட்டத்தில் தத்தெடுத்த 130 பள்ளிகளில் சிறந்த பள்ளியை தேர்ந்தெடுக்க "பள்ளி பராமரிப்பு மற்றும் நடவடிக்கையை பற்றி காலாண்டு அறிக்கை சமர்ப்பிக்க வலியுறுத்தப்பட்டது. இவ்வறிக்கையின் அடிப்படையில் கல்வி ஆண்டு 2013-14-லில் சிறந்த பள்ளியாக தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று பள்ளிகளுக்கு மொத்தம் ஒரு லட்சம் ரூபாய் பரிசுத் தொகையை திருமதி வல்சா பெஞ்சமின் செரியன், அவர்கள் தி செரியன் ஃபவுண்டேஷன் சார்பாக வழங்கினார். பரிசுப் பெற்ற பள்ளிகள் பற்றிய விவரம்:

முதல் பரிசு - ரோட்டரி ராமு ரெட்டியார் மேல்நிலைப் பள்ளி, கருங்காலிக்குப்பம், திருவண்ணாமலை

இரண்டாம் பரிசு - வில்லிவாக்கம் ஊராட்சி நடுநிலைப் பள்ளி, செக்டார் 2, முகப்பேர்

மூன்றாம் பரிசு - மீஞ்சூர் ஊராட்சித் தொடக்கப் பள்ளி, செம்பாசிப்பள்ளி குப்பம், பழவேற்காடு



முதல் பரிசு - ரோட்டரி ராமு ரெட்டியார் மேல்நிலைப் பள்ளி, கருங்காலிக்குப்பம்


இரண்டாம் பரிசு - வில்லிவாக்கம் ஊராட்சி நடுநிலைப் பள்ளி, செக்டார் 2, முகப்பேர்


மூன்றாம் பரிசு- மீஞ்சூர் ஊராட்சித் தொடக்கப் பள்ளி, செம்பாசிப் பள்ளி குப்பம், பழவேற்காடு

## டிசம்பர்

### 32 ஆம் ஆண்டு ராஜ் ஹோல்டிங்கின் கிறிஸ்துமஸ் விழா கொண்டாட்டம்:



அழிஞ்சிவாக்கம், உற்பத்திப் பிரிவு -2 குழுவினர் சுழற்கோப்பையைத் தட்டிச் சென்றனர்

இவ்வாண்டு கிறிஸ்துமஸ் விழாவில் நடனப்போட்டி, நாடக போட்டி, Adapt to the Tune போட்டி, கோலப்போட்டி, Hair Show போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளுடன் சிறப்பாக நடைப்பெற்றது. நிறுவன ஸ்தாபகர்கள் இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடத்தப்படுவதின் முக்கியத்துவத்தை தங்களது உரையில் விளக்கிக் கூறினார்கள். பணியாளர்களுக்கு மதிய உணவு பரிமாறி தங்கள் அன்பை பகிர்ந்துக் கொள்வது இவ்விழாவின் சிறப்பு அம்சம். இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்த திரு. சுரேஷ் மாதவன் அவர்களுக்கு, சிறப்பு பாராட்டுக்கள்.

### கல்வி உதவித் தொகை

கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு உதவித் தொகை போட்டியை பிரத்தியேகமாக ராஜ் ஹோல்டிங் பணியாளர் குழந்தைகளுக்கு ஜீன் மாதம் அறிவித்தது. இவ்வாண்டு மொத்தம் 9 குழந்தைகள் இப்பரிசு தொகையை பெற்றுக் கொண்டார்கள்.



அறங்காவலர்கள் வெற்றிப் பெற்றவர்களுடன்

### முதல் தமிழ் செய்திமடல் வெளியீடு

தி செரியன் ஃபவுண்டேஷன் தமிழ் மடல், ராஜ் ஹோல்டிங்ஸ் கிறிஸ்துமஸ் விழாவில் வெளியிடப்பட்டது.



இயக்குநர் தமிழ் இதழை வெளியிடுகிறார்

## 10வது ஆண்டு நமது நிறுவனம் தத்தெடுத்த பள்ளிகளில் கிறிஸ்துமஸ் விழா

கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு நமது சேவை நிறுவனம் தத்தெடுத்த பள்ளி (சமூக சேவா சங்க ஆரம்பப் பள்ளி, இராணி மேரிக் கல்லூரி வளாகத்திலும், ரோட்டரி மாதிரி பள்ளி, முகப்பேரிலும்), குழந்தைகளுக்கு கேக் வழங்கியது. இந்த பத்தாவது கிறிஸ்துமஸ் விழா கிறிஸ்துமஸ் தாத்தாவின் நடனம், குழந்தைகளின் குறுநாடகங்கள், சிறப்பு பாடல்களுடன் சிறப்பாக நடைபெற்றது.

ரோட்டரி மாதிரி பள்ளியின் சத்துணவு கூடத்தில் புகை அடுப்பை பயன்படுத்துவதால், சமைப்பது கடினமாக உள்ளது என்பதை அறங்காவலர்கள் கவனத்திற்கு கொண்டு வந்தார்கள். இதற்கு தேவையான பெரிய கேஸ் அடுப்பை செரியன் ஃபவுண்டேஷன் நன்கொடையாக வழங்கியது



சமூக சேவா பள்ளியில் கிறிஸதுமஸ் விழா



கேஸ் அடுப்பு நன்கொடையாக அளிக்கப்பட்டது



ரோட்டரி மாதிரி பள்ளியில் கிறிஸதுமஸ் விழா

## கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டை



MERRY CHRISTMAS

ராஜ் ஹோல்டிங்ஸின் வாழ்த்து அட்டையில் தத்தெடுத்த பள்ளி குழந்தைகளின் புகைப்படம்

திருமதி. கரினா ஜார்ஜ் செரியன் நமது நிறுவனம் தத்தெடுத்த பள்ளி குழந்தைகளின் புகைப்படத்தையும், அவர்கள் அக்டோபர் மாத போட்டியில் வரைந்த ஓவியத்தையும் அடிப்படையாக வைத்து கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகளை வடிவமைத்தார்கள்.

## அறங்காவலர்களை பற்றிய புதிய செய்திகள்

### திரு. பெஞ்சமின் செரியன், மேலாண்மை அறங்காவலர்



"இந்திய மனித முடி ஏற்றுமதியாளர் கள் சங்கத்தின்" தலைவர் பொறுப்பை ஏற்றார். இந்த அரசு மற்றும் வர்த்தக சங்கத்திற்கு பிரதிநிதியாக மட்டும் செயல்படாமல் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 200 சதவீதம் வணிக அளவு அதிகரிக்கவும் திட்டமிடுகிறார். மேலும், இந்தியாவில் கல்வியை மேம்படுத்த 'Rotary Literacy Mission' உறுப்பினரானார்.

### திருமதி. வல்சா பெஞ்சமின் செரியன், இயக்குநர்



நமது இயக்குநர், வெற்றிகரமாக YWCA Madras-ன் தலைவராக தனது 2½ ஆண்டு கால சேவையை நிறைவேற்றினார். மூத்த குடிமக்கள் தங்குவதற்காக கட்டிடம் மற்றும் சமுதாய கல்லூரி கட்டுமான நீட்டிப்பு பணிகளை செயல்படுத்த சிறப்பு திட்ட ஒருங்கிணைப்பாளராக பொறுப் பேற்றுள்ளார்.

### திருமதி. சாரா B செரியன், அறங்காவலர்



அறங்காவலர் திருமதி சாரா B செரியன் அவர்கள் YWCA Madras-ன் IGH (International Guest House) க்கு செயற்குழு உறுப்பினர் ஆனார். மேலும், அவர் விசாரா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் இயக்குநராக செயல்பட்டு வருகிறார்.

### திரு. ஜார்ஜ் B செரியன், அறங்காவலர்



அறங்காவலர் திரு. ஜார்ஜ் B செரியன் அவர்கள் Madras Midtown Round Table (MMRT)42-துணைத் தலைவராக பணியாற்றினார்.

### திருமதி. கரினா G செரியன், அறங்காவலர்



அறங்காவலர் திருமதி கரினா அவர்கள், மெலோனி சாலை சங்கம் அமைக்க முன்னின்று செயல்பட்டார். மெலோனி சாலை நிலையை மேம்படுத்த எக்ஸ்னோராவுடன் இச்சங்கத்தினை இணைத்து செயல்படுத்தி வருகிறார். மேலும், இவர் YWCA Madras-ன் Sahodari Project மற்றும் PASI (Public Affairs& Social Issues) Project செயற்குழு உறுப்பினரானார்.

## 10 வது ஆண்டு நிறைவு கொண்டாட்டம்

**எங்கள் ஆதரவாளர்களுக்கு நன்றி!**


ஊழியர்களுக்கும் பணியாளர்களுக்கும் எங்களது நன்றிகள்

RAJ HOLDINGS

RAJ GLOBAL HOLDING Pvt. Ltd.

RAJ HAIR INTL Pvt Ltd.

RAJ REDEF MEDIA Pvt. Ltd.

Raj Waterscape Properties Pvt Ltd

B & H EXPORTS

RAJ TRADING


### நன்கொடை விவரங்கள்:

தங்கள் நன்கொடைகளை "The Cherian Foundation" என்ற பெயரில் காசோலை (Cheque) அல்லது வரைவோலை (Demand Draft) ஆக எடுத்து எங்களுக்கு அனுப்பலாம். தாங்கள் கொடுக்கும் நன்கொடைகள் அனைத்தும், வருமான வரி சட்டத்தின் 80 G பிரிவின் (u/s 80 G of the Income Tax Act vide Certificate No. DIT (E) No.2 (67)/03-04 dated 01.04.2007 Valid till 31.03. 2010) கீழ் வரி விலக்கு பெறுகின்றன.

வங்கி கணக்குடையவர் பெயர்: The Cherian Foundation
வங்கி பெயர் மற்றும் கிளை: ICICI Bank, Teynampet
கணக்கு வகை: சேமிப்பு கணக்கு
கணக்கு எண்: 000101212525
ஆர்டிஜிஎஸ்/என்இஎப்டி/ஐஎப்எஸ்சி குறியீடு: ICICI 00000001


### எங்கள் முகவரி

44, மெலோனி ரோடு,
தி. நகர், சென்னை - 600 017
தொலைப்பேசி: 044-39278133/34
மின்னஞ்சல்: projects@cherianfoundation.org
இணையதளம்: www.cherianfoundation.org



### ஆசிரியர் குழு:

திருமதி. வல்சா பெஞ்சமின் செரியன், இயக்குநர்
திருமதி. கரினா ஜார்ஜ் செரியன், அறங்காவலர்
திரு. விஜய் சார்லஸ் வெஸ்லி, திட்ட ஒருங்கிணைப்பாளர்